# 08 எமது கலாசாரம்

## அறிமுகம்

எமது இலங்கைத் திருநாடானது பல இனம், பல மொழி, பல மதம், பல சாதி, பல பிரதேசங்கள் போன்ற பல இயல்புகளை உடைய ஒரு நாடாகும். இவ்வாறு பல இயல்புகளை உள்ளடக்கி உள்ளமையை நாம் பல்வகைமை எனக் குறிப்பிடலாம். எமது நாட்டில் காணப்படும் கலாசார பல்வகைமை புராதன காலந்தொட்டே இலங்கைச் சமூகத்தை மேம்படுத்துவதில் பங்களிப்புச் செய்துள்ளது. இதனால் நாம் இவ் பல்வகைமையை புறக்கணிக்க முடியாது.

இவ்அலகைக் கற்பதன் மூலம் ஒவ்வொருவரும் தத்தமது சமூகங்களினது கலாசார பாரம்பரியங்களை மதிக்கவும், பின்பற்றவும் ஏனைய சமூகங்களின் பாரம்பரியங்களை மதிக்கவும் கற்றுக்கொள்வீர்கள். அத்துடன் ஒவ்வொரு கலாசாரங்களினதும் பண்புகளை அறியக்கூடியதாகவும் இருக்கும். இதனால் சமூகங்களிடையே நல்ல தொடர்பினை ஏற்படுத்தி பல்வேறு இன, மத பழக்கவழக்கங்களை நடத்தைகளை பின்பற்றும் இலங்கை சமூகத்தில் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழத் தேவையான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்து கொள்வீர்கள். இது மட்டுமன்றி கலாசார பல்வகைமை கொண்ட சமூகத்தின் ஒரு சிறந்த பிரஜை என்ற வகையில் தேசிய தனித்துவத்தைப் பேணக்கூடிய நல் ஒழுக்கத்துடன் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளையும் விருத்தி செய்து கொள்வீர்கள்.

## 8.1. கலாசாரம்


"கலாசாரம்" என்பது ஒரு மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியின் அடிப்படையில் தோற்றுவித்துக் கொண்ட பழக்க வழக்கங்கள், ஆற்றல்கள் அறிவுரைகள், நம்பிக்கைகள், எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், சமூக பெறுமானங்கள், மொழி, சமயம், உற்பத்தி முறை, தொழிநுட்ப வளர்ச்சி, கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், ஆடைஆபரணங்கள் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய கூட்டான செயற்பாடாகும். சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின் சமூகம் ஒன்றின் வாழும் முறையினை பிரதிபலிப்பதாகும். இது வாழ்க்கை முறையை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஒரு சிக்கலான செயற்பாடாகும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

கலாசாரத்தை ஒரே நாளில் விளங்கிக் கொள்வது சிரமமாகும். நீங்கள் நாளாந்தம் உங்கள் வீட்டில் அம்மா, அப்பா, பாட்டன், பாட்டி சகோதரர்களோடு குடும்பமாக வாழும் போது உங்கள் சமூகத்திற்குரிய கலாசாரப்படி நடந்துகொள்வதை பற்றி சிந்தியுங்கள். வீட்டிலே நீங்கள் உணவு உட்கொள்ளும் முறை, குடிக்கும் முறையை எண்ணிப்பாருங்கள். சமய வழிபாடுகளை வீட்டில் எவ்வாறு மேற்கொள்ளுகிறீர்கள் என எண்ணிப் பாருங்கள்.வீட்டைப் போன்றே உங்கள் பாடசாலையில் நடைபெறும் நாளாந்த நிகழ்வுகளை நினைத்துப் பாருங்கள். பாடசாலை ஆரம்பிக்கும் முறை, சமய அனுஷ்டானங்கள், விழாக்கள், போட்டிகள், பாடசாலை முடிவடையும் போது இடம்பெறும் நிகழ்வுகள் போன்றவற்றைப் பற்றி சிந்தியுங்கள்.

கலாசாரத்தை இறுகப்பற்றி நிற்கும் இடமாக கோயில்கள், விகாரைகள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் காணப்படுகின்றன. நீங்கள் வழிபட செல்லும் இச் சமய ஸ்தலங்களில் நடைபெறும் சடங்குகளை எண்ணிப்பாருங்கள். அங்கு நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்; எவ்வாறு ஆடைகள் அணிதல் வேண்டும் என சமய தலைவர்களும் பெற்றோரும் ஆசிரியர்களும் சொல்லித் தந்தவற்றை நினைத்துப் பாருங்கள். இப்போது நீங்கள் சார்ந்த சமூகத்தின் கலாசாரத்தை பற்றிய விளக்கத்தினை ஓரளவு பெற்றிருப்பீர்கள்.




கலாசாரம் படிப்படியாக மாற்றமடையும் தன்மை கொண்டது. புதிய கண்டு பிடிப்புக்கள், புதிய படைப்புகள், புதிய தேவைகள், போன்றவற்றிற்கேற்ப மாற்றங்கள் நிகழலாம். எனினும் ஒரு சமூகம் நிலைத்திருப்பதற்கு அச் சமூகங்கள் தமது அடுத்த பரம்பரைக்கு அக்கலாசாரங்களைப் பேணி


ஒப்படைத்தல் வேண்டும். கலாசாரத்தை ஒப்படைப்பதில் முன்னோடியாக விளங்கும் நிறுவனங்கள் பலவாகும். இவற்றில் குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள் முதலிடம் வகிக்கின்றன.

**செயற்பாடு**

**இவ் வருடத்திற்குரிய நாட்காட்டியில் விடுமுறை நாட்களை அவதானியுங்கள், அவற்றில் எவை எந்தெந்த இன, மத மக்களுக்கு முக்கியமானவை என்பதை கண்டறிந்து ஒரு அட்டவணை தயாரிக்குக.**

## 8.2 பல்வேறு கலாசாரங்களின் சிறப்புக்களை அறிந்து கொள்வோம்.

இலங்கைக்கலாசாரம் இனம், மொழி, சமயம், வாழ்வாதாரம், பிரதேசம்,சமூக வகுப்பு போன்ற பன்மைத்தன்மைகள் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இன ரீதியாகப் பார்ப்போமாயின் இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் என மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதே போல் சமயரீதியாக பார்ப்போமாயின் பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம், கத்தோலிக்கமல்லாத சமயங்களை பின்பற்றுவோர் காணப்படுகின்றனர். மொழிரீதியாகப் பார்ப்போமாயின் சிங்களமொழி, தமிழ் மொழி, ஆங்கில மொழி பேசுவோர் காணப்படுகின்றனர்.



வாழ்வாதார ரீதியாக நோக்குவோமாயின் முக்கியமாக விவசாயம், மீன்பிடித் தொழில் மற்றும் வர்த்தகம், சிறு பயிர்செய்கை, சிறு கைத்தொழில் போன்றவற்றில் ஈடுபடுபவர்களாக காணப்படுகின்றனர். பிரதேச ரீதியாக நோக்குகின்ற பொழுது கண்டிய, சிங்களவர் கரையோர நாட்டவர், யாழ்ப்பாணத்தவர், மட்டகளப்பார், மலையகத்தார் போன்ற பிரதேச ரீதியான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இங்கு முக்கியமாக ஆடையணிகள், கலைநுட்பங்கள்,



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

மொழிப்பாவனை, பழக்கவழக்கங்கள், சட்டதிட்டங்கள் என்பவற்றில் வேறுபாடு காணப்படுகின்றன.

சமூக வகுப்பினை நோக்குகின்ற பொழுதும் மேல் வர்க்கத்தினர், இடை வர்க்கத்தினர், கீழ்நிலையில் உள்ள வர்க்கத்தினர் என இலங்கை மக்கள் காணப்படுகின்றனர். இவ்வாறு எமது கலாசாரம் பல காரணிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டே வந்துள்ளது. முக்கியமாக சமயங்களினது செல்வாக்கும் காலனித்துவவாதிகளான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியரின் செல்வாக்கும் குறிப்பிடதக்கதொன்றாகும்.





ஒவ்வொரு இன மக்களின் நடை, உடை, உணவு, பழக்க வழக்கங்கள், சமய விழாக்கள் போன்றவற்றில் அவர்களின் கலாசார இலட்சணங்கள் தெளிவாகக் காணக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வாறான சில சந்தர்ப்பங்களை நோக்குவோம்.

இலங்கையில் வாழும் சிங்களவர்களின் கலாசாரம், பௌத்த மதத்துடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். இக் கலாசாரம் சித்திரம், சிற்பம், செதுக்கல் போன்ற கலைகளால் போசிக்கப்பட்டு வந்துள்ளது. புராதன விகாரைகள், சமய வழிபாட்டு இடங்கள், கட்டடக்கலை போன்றவற்றின் ஊடாக இவற்றினை நாம் இன்றும் அறிந்து கொள்ளலாம். புத்தாண்டுக் கொண்டாட்டம் சிங்கள மக்களுக்கு ஒரு முக்கிய கலாசார நிகழ்வாகும். புதுவருடத்தை சித்திரை மாதத்தில் கொண்டாடுவார்கள். புதுவருடத்தில் பிரார்த்தனையில் ஈடுபடல்,

சுப நேரத்தில் உணவு சமைத்தல், உணவு உட்கொள்ளல், மருத்து நீர் வைத்தல் வேலைக்குச் செல்லுதல் போன்ற சம்பிரதாயங்கள் இடம்பெறும். அத்துடன் பெற்றோருக்கும் பெரியவர்களுக்கும் வெற்றிலை கொடுத்து வணங்குதல், காலில் விழுந்து ஆசிர்வாதம் பெறல் போன்ற முறைகளும் காணப்படுகின்றன. மற்றும் புது வருடத்தில் பாரம்பரிய உணவுகளை பரிமாறிக் கொள்வார்கள். முக்கியமாக பாற்சோறு, கொண்டைப்பணியாரம், ஆஸ்மி போன்றனவாகும்.

பூரணைதினம் பௌத்தர்களது முக்கிய தினமாகக் கருதப்படுகிறது. வைகாசி மாதத்தில் வரும் பூரணை தினத்தில் வெசாக் பண்டிகை மிக விமர்சையாகக் கொண்டாடுவார்கள். புத்தரின் பிறப்பு, அவரின் பரிநிர்வாணம், அவரின் இறப்பு ஆகிய மூன்று முக்கிய நிகழ்வுகளையும் நினைவு கூர்ந்து இத்தினத்தில் கொண்டாடுவர். தமது வீடுகளிலும் பொது இடங்களிலும் வெளிச்சக் கூடுகளால் அலங்கரிப்பர். அவை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்.



தமிழர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையில் இந்துக்களாகவே காணப்படுகின்றனர். தமிழர் கலாசாரம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே தமிழர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்துவதாக இருந்து வருகின்றது. தமிழர்களின் கலாசார இலட்சணங்களை வெளிப்படுத்தும் சில நிகழ்வுகளை நோக்குவோம்.

சித்திரை மாதத்திலேயே தமிழர்களுக்கும் புத்தாண்டு பிறக்கிறது. புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது மருத்து நீர் வைத்தல், வழிபாடுகளில் ஈடுபடல், நாள் காரியம் பார்த்தல் போன்ற சம்பிரதாயங்கள் காணப்படுகின்றன. இவர்கள் அணியும் உடையைப் பொறுத்தவரையில் ஆண்கள் வேட்டி சால்வையும் பெண்கள் சேலையும் அணிவர். வீட்டுச் சூழலைப் பொறுத்தவரையில் பண்டைய தமிழர்களின் வீட்டு முற்றத்தில் அழகான கோலம் போடப்பட்டிருக்கும்; வாசலில் மாவிலை தோரணங்கள் தொங்கவிடப்-



பட்டிருக்கும் தமது வீட்டிற்கு வருபவர்களை வணக்கம் கூறி கைகூப்பி வரவேற்று உபசரிக்கும் பண்பு சிறப்பானதாகும். இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இணைந்து புதுவருடப் பிறப்பினைக் கொண்டாடுவர்

தமிழர்களின் கலாசாரத்தை வெளிப்படுத்தும் விழாக்களில் பொங்கல் விழாவும் முக்கியமானதாகும். சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாக இவ்விழாவினை கொண்டாடுகின்றனர். சூரியனிடமிருந்து நாம் அனைத்தையும் பெறுகின்றோம். விலங்குகள், மரம், செடி, கொடி எல்லாம் அவனிடமிருந்துதான் உயிருக்கு வேண்டிய அனைத்தையும் பெறுகின்றன. இது சமய கொள்கை மட்டுமல்ல விஞ்ஞானத்தின் மூலம் கண்ட உண்மையுமாகும். இதனால்தான் தைமாதத்தில் உழவுத் தொழிலுக்கு பயன்பட்ட கதிரவனை வழிபடுகின்றனர்.




பொங்கலுக்கு மறுநாள் உழவுத் தொழிலுக்குப் பயன்பட்ட மாடுகளுக்கு நன்றி செலுத்துகிறார்கள். அதனால் அதனை "மாட்டுப் பொங்கல்" என்று அழைக்கிறார்கள். நிலத்தை உழுவதற்கும் கிணற்றிலிருந்து நீரை இறைப்பதற்கும் விளைந்த பயிரில் இருந்து நெல் மணிகளை பிரிக்கவும் விளைந்த தானியங்களை வயலில் இருந்து வீட்டுக்குக் கொண்டு வரவும் மாடுகள் உதவுகின்றன. இவ்வளவு கடினமான வேலைகளையும் வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாது உழைக்கும் கால் நடைகளுக்கு மாட்டுப் பொங்கல் என்று ஏற்படுத்தி கொண்டாடி வருவது தமிழர்களின் நன்றி மறவாத தன்மையைப் புலப்படுத்துகின்றது. இதனை சில இடங்களில் பட்டிப் பொங்கலென்றும் கூறுவதுண்டு.

அடுத்ததாக முஸ்லிம்களின் கலாசார இலட்சணங்களை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் சிலவற்றைப் பார்ப்போம் ஒவ்வொரு இன மக்களும் ஒரு வருடத்தில் உள்ள பன்னிரண்டு மாதங்களையும் ஒவ்வொரு பெயர் கொண்டு அழைப்பர். அதே போல் முஸ்லிம்களின் புது வருடம் முஹரம் மாதத்தில் ஆரம்பமாகின்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் இம் முஹரம் மாதத்தில் இடம் பெற்றிருப்பதால் அதனையே வருட ஆரம்பமாக கணித்து வருகிறார்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

நோன்புப் பெருநாள் முஸ்லிம்களின் ஒரு முக்கிய பெருநாள் ஆகும். ஒரு மாதகாலம் பகல் நேரங்களில் உண்ணாது, பருகாது இருந்து இறைவனின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக கொண்டாடப்படும் திருநாளே நோன்புப் பெருநாளாகும். இந்நாளில் வழிபாடுகளில் ஈடுபடுவார்கள்; புத்தாடைகள் அணிவார்கள்; உற்றார், உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று, தமது உறவுகளை மீட்டிக்கொள்வார்கள்; மனக்கசப்புக்களை விலக்கிக் கொள்வார்கள்.



முஸ்லிம்களின் உடைகளைப் பொறுத்தவரை ஆண்களுக்கான உடைகளை பெண்கள் அணிவதும் பெண்களுக்கான உடைகளை ஆண்கள் அணிவதும் தடுக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் பெண்கள் உடலின் பகுதிகளான கால், பாதம் கைவிரல் தவிர்ந்த பகுதிகளை மறைக்கக்கூடிய பர்தா உடையையே அணிவார்கள். இதன் மூலம் தன்னை பாதுகாத்துக் கொள்வதுடன் அடுத்தவர் களின் உணர்வுகளை தூண்டுவதற்கும் இடமளிக்காமலும் இருப்பர். தமது வீடுகளுக்கு வருபவர்களை 'ஸலாம்' கூறி வரவேற்பார்கள். இதில் ஆண்கள் ஆண்களையும், பெண்கள் பெண்களையும் வேறு வேறாக வரவேற்பார்கள். அதே போல் வழி அனுப்பும் போதும் ஒருவருக்கொருவர் 'ஸலாம்' சொல்லி ஆரத்தழுவி வழியனுப்பிவைப்பர்கள்.



இலங்கையிலுள்ள கத்தோலிக்கர், கத்தோலிக்கமல்லாதவர்களில் கணிசமானவர்கள் சிங்கள, தமிழ் இனத்தவர்களாக காணப்படுகின்றனர். இதனால் சிங்கள, தமிழ் கலாசாரங்களின் செல்வாக்கு காணப்படுகின்றது. இவர்களின் முக்கிய பண்டிகையாக கிறிஸ்மஸ் பண்டிகை (இயேசுவின் பிறப்பு), ஈஸ்டர் (இயேசுவின் உயிர்ப்பு) விழா போன்றன காணப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழாவை ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி வெகு விமர்சையாகக் கொண்டாடுவர். புத்தாடைகள்அணிந்து ஆலயங்களுக்குச் சென்று, நள்ளிரவு ஆராதனையில் கலந்துக் கொள்வார்கள். ஒருவருக்கொருவர் கிறிஸ்மஸ் வாழ்த்துக் கூறி மகிழ்ந்திருப்பர். பரிசுப் பொருட்களை பரிமாறிக் கொள்வர். ஏழை



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

எளியவர்களுக்கு உதவி செய்து, அன்பு காட்டுவார்கள். மேற்கத்தைய பாணியிலேயே பெரும்பாலும் உடைகளை அணிந்து கொள்வார்கள். ஒருவரை ஒருவர் வரவேற்கும் பொழுது கைகொடுத்து வரவேற்பார்கள்.

இதுவரை நீங்கள் எமது நாட்டில் உள்ள பல்வேறு சமூக குழுக்களினாலும் வெளிப்படுத்தப்படும் கலாசார இலட்சணங்கள் சிலவற்றை அறிந்திருப்பீர்கள். இன்னும் பல கலாசார இலட்சணங்கள் காணப்படுகின்றன. அவற்றைப்பற்றிப் அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இன்றைய நவீன யுகத்தில் தொடர்பாடல்களின் வளர்ச்சி, தொழிநுட்பத்தின் வளர்ச்சி, அதனூடாக உலக மயமாக்கலினால் எமது பாரம்பரிய கலாசாரம் வெளிநாடுகளின் செல்வாக்கிற்கு உட்படக் கூடியதாக உள்ளது. எனவே நாம் அனைவரும் எமது கலாசாரத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**செயற்பாடு**

[01] பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(i) இலங்கைக் கலாசாரம் பன்மைத் தன்மை வாய்ந்தது என்பதற்கான காரணங்களைத் தருக.

(ii) பௌத்தம், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ கலாசார இலட்சணங்கள் வெளிப்படுத்தும் விடயங்களை குறிப்பிடுக.

[02] பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வண்ணம் மாணவர்கள் குழுக்களாக பிரிந்து வகிபாகமேற்று நடித்துக் காட்டவும்.

## 8.3 அனைத்து கலாசாரங்களிலும் காணப்படும் பொது இயல்புகள்

இலங்கை பன்மைக் கலாசாரத்தைப் பேணிவருகின்ற ஒரு நாடாகும் என்பதனை முன்னைய அலகில் கற்றுள்ளீர்கள். இவ்வாறு ஒவ்வொரு சமூக குழுவினரும் தத்தமது கலாசாரங்களைப் பேணி வருகின்ற பொழுதிலும் இவை ஒன்றை விட இன்னொன்று உயர்ந்ததோ தாழ்ந்ததோ அல்ல.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

எனவே அனைவரும் தத்தமது கலாசாரங்களுக்கு எவ்வாறு முக்கியத்துவமும் மதிப்பும் கொடுக்கிறார்களோ அதே போன்று ஏனைய கலாசாரங்களுக்கும் உரிய மதிப்பு கொடுத்து நடத்தல் வேண்டும்.

எல்லா கலாசாரங்களிலும் காணக்கூடிய பொது அம்சங்கள் ஏராளம். மொழி, சமயம், வழிபாடு, நம்பிக்கைகள், கலைநுட்பங்கள், கலை, ஆடையணிகள், நடத்தைகள் போன்றன பிரதானமாகும். அனைத்து கலாசாரங்களிலும் மொழி பிரதான இடத்தை வகிக்கிறது. ஒவ்வொரு மொழிக்கும் விசேட எழுத்துக்கள், பேச்சு வழக்கு போன்றன காணப்படுகின்றன. இதே போல சமய வழிபாடுகளிலும் பல்வேறு வணக்க முறைகள், வணக்கத் தலங்களில் பின்பற்றும் சடங்குகள், பூஜைகள் என்பன காணப்படுகின்றன.

சகிப்புத் தன்மையும் அடக்கமும் பணிவும் எல்லாக் கலாசாரங்களிலும் ஒப்பற்றமுறையில் பின்பற்றப்படும் பொதுவான இயல்பாகும். அதேபோல் மிக நுட்பமான வேலைப்பாடுகள் அமைந்த அழகான சிற்பங்கள், ஓவியங்கள் எல்லா கலாசாரங்களிலும் காணப்படுகின்றன. நாட்டின் பொருளாதார நடவடிக்கையில் எல்லா கலாசாரங்களையும் சேர்ந்த மக்களும் ஈடுபடுகின்றனர். பயிர்ச் செய்கை, கால் நடைவளர்ப்பு, கடற்றொழில், கைத்தொழில், வர்த்தகம், போக்குவரத்து போன்ற சேவைகளிலும் ஒவ்வொரு சமூகங்களின் பங்களிப்பும் காணப்படுகின்றன.

பொருளாதார நடவடிக்கையுடன் அரசியல் நடவடிக்கைகளிலும் அனைத்து கலாசாரத்தையும் சேர்ந்த மக்களும் ஈடுபடுகின்றனர். தாம் விரும்பிய அரசியல் கட்சிகளையும் அரசியல் கோட்பாடுகளையும் பின்பற்றி தமது அரசியல் உரிமைகளை அனுபவிக்கின்றனர். சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்து சமூக நலன்களுக்குத் தத்தமது பங்களிப்பினைச் செய்கின்றனர். அவை காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே இருக்கும். அவ்வாறான மாற்றங்களுக்கு இசைவாக்கம் அடையக் கூடிய ஆற்றல்கள் அனைத்துக் கலாசாரங்களிலும் காணப்படும் பொதுவான இயல்பாகும்.

உதாரணமாக; முன்னைய காலத்தில் பெண்கள் வேலைக்குச் செல்வதென்பது வரவேற்கப்பட்டதொன்றாக இருக்கவில்லை. ஆனால், இன்று பொருளாதார நெருக்கடி, பெண்களின் கல்வி அறிவு போன்ற காரணங்களால் பெண்கள் வேலைக்குச் செல்வதை அனைத்துக் கலாசாரங்களும் ஏற்றுக்கொள்கின்றன.

அதே போல் நோய்களை குணப்படுத்துவதற்கும், மரபு ரீதியான முறைகள், நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டு, நவீன மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கு தற்போது எந்தத் தடையும் இல்லை.

கலாசாரம் எமக்கு சூழலுக்கு ஏற்றவாறு வாழக் கற்றுத்தருகிறது. மழையில்லாத காலத்திலே பயன்படுத்துவதற்காக நீரை சேமிக்க பாரிய குளங்கள் கட்டப்பட்டது இவ்வாறேயாகும். எமது புராதன நீர்பாசன தொழில் நுட்பம் இதற்கு சிறந்த உதாரணமாகும். ஊழியர்களைக் கொண்டு மட்டுமே செய்ய முடியாத விடயங்களை பல்வேறு இயந்திர உபகரணங்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலும் இத்தகையதாகும். வெயில், மழையில் இருந்து பாதுகாப்புப் பெற வீடுகளை அமைக்க தலைப்பட்டமையும் இன்னொரு முக்கிய அம்சமாகும். ஆதிகாலத்திலே கற்குகையில் வசித்த மனிதன் இன்று மாடமாளிகைகள் நிர்மாணித்து வாழ்கிறான். இதுவும் கலாசார மாற்றமாகும்.

அனைத்து கலாசாரங்களிலும் பொது இயல்பு இருக்கின்றமைபோல் அனைத்து கலாசாரத்தையும் சேர்ந்தோர் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ்வது அவசியமாகும். இதற்கு ஒவ்வொரு கலாசாரங்களிடையிலும் தொடர்புகள் இருப்பது அவசியமாகும். கலாசாரங்களுக்கிடையில் ஏற்படும் தொடர்புகள் மூலம் ஒவ்வொரு சமூகமும் நிலைத்திருக்க முடியும். சமூகத்தின் சீரான நிலைப்பாட்டுக்கு தேவையான மானிடப்பண்புகளை அனைத்து கலாசாரங்களும் வலியுறுத்துகின்றன.

கலாசாரங்களுக்கிடையிலான தொடர்புகள் மூலம் ஒவ்வொரு சமூகங்களினதும் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சட்டதிட்டங்கள் ஆகியவற்றை அறிய வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் அவற்றின் உண்மையான உயரிய சிறப்பினை அறியலாம். இதனால் சமூகங்களிடையே பிணக்குகள் இன்றி ஒன்றையொன்று ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகும்.

**செயற்பாடு**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. **அனைத்து கலாசாரங்களிலும் காணப்படும் பொது இயல்புகள் எவை?**
2. **கலாசாரம் மனித தேவைகள் விருப்பங்களுக்கேற்ப இசைவாக்கம் அடையும் ஆற்றல் உடையது என்பதற்கு மூன்று உதாரணங்கள் தருக.**




இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## 8.4 தேசிய தனித்துவமும் தேசிய ஒத்துழைப்பும்

ஒரு நாட்டில் பிறப்பினாலும் பதிவு செய்வதனாலும் குடியுரிமை பெறும் மக்கள் தேசியம் என்பதில் அடங்குவர். எமது நாட்டில் குடியேறிய மக்களின் தாயகங்களை நோக்குவதன் மூலம் தேசிய தனித்துவத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் விளங்கிக்கொள்ளலாம். வட இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய ஆரிய இனத்தொகுதிகளிலிருந்தே சிங்கள இனம் உருவாகியது. அதே போல் தென் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய திராவிட மொழி பேசும் கூட்டத்தினர் தமிழர் ஆவர். அராபியாவிலிருந்து வர்த்தகர்களாக வந்து குடியேறியவர்கள் முஸ்லிம்களாகவும் காணப்படுகின்றனர். போர்த்துக்கேயர் ஒல்லாந்தரின் சந்ததியினரே பறங்கியர், மலாயர் ஆவர். இதிலிருந்து நாம் விளங்கிக்கொள்வது என்ன? எமது மூதாதையர்கள் வேறு நாட்டில் இருந்தே இலங்கைக்கு குடியேறியவர்கள் ஆவர்.

எமது மூதாதயர்களின் வழித்தோன்றல்களாகிய நாம் இன்று "இலங்கையர்" என்ற அடையாளத்துடன் இலங்கை தேசியத்துக்குள் வாழ்ந்து வருகின்றோம். ஒவ்வொரு இன குழுவினரும் தத்தமது கலாசாரத்தைப் பின்பற்றி மதிப்பதுடன், ஏனைய இன குழுவினரது கலாசாரத்தை மதித்து நடப்பதுடன், அனைவரும் ஒரே நாட்டவர் என்ற உணர்வுடன் கருமமாற்றுவதன் மூலமே தேசியம் உருவாகிறது. உதாரணமாக இலங்கையர், இந்தியர், அமெரிக்கர் என அழைப்பதாகும்.



ஒரு தேசியத்துக்குள் பல்வேறு இனத்தவர்கள் பல மொழி பேசுவோர் பல மதத்தினை பின்பற்றுவோர் வசிக்க முடியும். உதாரணமாக இலங்கையை எடுத்துக் கொண்டால் சிங்களம் ,தமிழ், முஸ்லிம் என இலங்கை தேசியத்துக்குள் மூன்று இனங்கள் வசிப்பதைக் காணலாம்.

பல்வகைமை நிலவும் இலங்கைச் சமூகத்தில் பல்வேறு காரணிகளால் வெவ்வேறு மக்களினங்களுக்கு அநீதி ஏற்பட இடமுண்டு. அவ்வாறான சந்தர்ப்பத்தில் நாம்

அனைவரும் ஒன்று சேர்ந்து எமது கலாசாரங்களில் உள்ள பண்புகளுக்கு அமைய வேற்றுமையில் ஒற்றுமை கண்டு அநீதிக்கு இடமளித்தல் கூடாது. இதனையே எமது கலாசாரங்களும் வலியுறுத்துகின்றன.

ஒவ்வொரு பிரஜையும் தனதும் தான் சார்ந்த சமூகத்தினதும் தனித்துவத்தை இழக்காமல் இலங்கையர் என்ற தேசிய அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு நாம் நடந்து கொள்வதற்கு எமது கலாசாரங்கள் எமக்கு துணை நிற்கின்றன. வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற ஒவ்வொரு பிரஜையும் தான் எல்லா வகையிலும் ஏனைய இனங்களில் உள்ளவர்களைப் போல் சமமாக நடத்தப்படுகின்றேன் அல்லது மதிக்கப்படுகின்-றேன் என்ற உணர்வு எழுகின்ற போது தேசிய ஒற்றுமையானது இறுகக்கட்டி எழுப்பப்படுகின்றது. இலங்கை நாட்டை அபிவிருத்தி அடையச் செய்வதற்கு இன ரீதியாக சிந்தித்து செயல்படக் கூடாது. மூவின மக்களும் இலங்கையர் என்ற வகையில் சிந்தித்து கருமமாற்றுவதன் மூலம் எமது நாட்டை அபிவிருத்தி அடையச் செய்யலாம்.

இலங்கையின் சுதந்திரத்தை மூவினத்தையும் சேர்ந்தவர்கள் ஒற்றுமையாக போராடியே பெற்றுக் கொடுத்தார்கள். அவர்களில் முக்கியமாக சேர். டி. ஜயதிலக்க, சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சேர். ராஸிக் பரீத், திரு டி. எஸ். சேனாநாயக்க, திரு ரி. பி. ஜயா போன்ற சிலரைக் குறிப்பிடலாம். இவ்வாறு மூவினத்தவர்களும் போராடி பெற்ற எமது நாட்டு சுதந்திரத்தை நாம் எல்லோரும் பாதுகாக்க வேண்டும் சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சமத்துவம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு அதன் மூலம் நாம் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தைப் பாதுகாக்கலாம்.

இலங்கையானது இந்து சமூத்திரத்தின் முத்து என உலக மக்களினால் அழைக்கப்படும் அழகிய நாடாகும். எமது நாடானது ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவ நாடாக உறுப்புரிமை பெற்று விளங்குகின்றது. அது மட்டுமன்றி அணிசேரா நாடுகளின் ஒன்றியம், சார்க் அமைப்பு போன்ற பல்வேறு சர்வதேச அமைப்புகளில் அங்கம் வகித்து வருகிறது. சர்வதேச ரீதியில் இலங்கை என்னும் அடையாளத்தை வெளிப்படுத்த எமது நாட்டுக்கென தேசியக் கொடி ,தேசிய கீதம், அரச இலட்சினை, தேசிய மலர், தேசிய மரம் போன்ற முக்கிய அடையாளங்கள் காணப்படுகின்றன. அவை பற்றி அறிவது எமது இங்கையின் அடையாளத்தை விளங்கிக்கொள்வதற்கு முக்கியமாகும்.

**செயற்பாடு**

(01) பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

1. பல்வகைமை என்பதன் பொருள் என்ன?
2. பல்வகைமையை ஏற்று சமத்துவத்துடன் செயற்படாவிட்டால் ஏற்படும் விளைவுகள் யாவை?

(02) மாணவர்கள் குழுக்களாக இயங்கி இனங்களுக்கிடையில் ஒற்றுமையை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்த குறுகிய வசனங்களை (கூற்றுக்களை) உருவாக்குக. அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## 8.5 தேசிய கீதம், தேசியக் கொடி, தேசிய இலட்சினை

இலங்கையின் தேசிய தனித்துவத்தை வெளிக்காட்டி நிற்பதில் தேசிய கீதமும் ஒன்றாகும். 1948 ஆம் ஆண்டு மாசி மாதம் 4 ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்ற பொழுது சுதந்திர தின விழாவில் முதன் முதல் தேசிய கீதம் பாடப்பட்டது. இத்தேசிய கீதத்தை இயற்றியவர் கலா சூரி ஆனந்த சமர கோன் ஆவார். தேசிய கீதத்தினை தமிழில் மொழிபெயர்த்தவர் புலவர் நல்லதம்பி ஆவார்.

### தேசிய கீதம்

*சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நல்லெழில் பொலி சீரணி*
*நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா*
*ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்*
*நறுஞ்சோலை கொள் லங்கா*
*நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்*
*நமதுதி ஏல் தாயே*
*நம தலை நினதடி மேல் வைத்தோமே*
*நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதாரருள் ஆனாய்*
*நவை தவிர் உணர்வானாய்*
*நமதேர் வலியானாய்*
*நவில் சுதந்திரம் ஆனாய்*
*நமதிளமையை நாட்டே*
*நகு மடி தனையோட்டே*
*அமைவுறும் அறிவுடனே*
*அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதார் ஒளி வளமே*
*நறிய மலர் என நிலவும் தாயே*
*யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த*
*எழில்கொள் சேய்கள் எனவே*
*இயலுறு பிளவுகள் தமை அறவே*
*இழிவென நீக்கிடுவோம்*
*ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி*
*நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா*

தேசிய கீதம் பாடுவதினால் எமது தாய் நாட்டின் மீது பற்றும்பாசமும் மதிப்பும் அபிமானமும் ஏற்படும். தேசிய கீதமானது தேசிய ஒற்றுமையையும் தேசிய தனித்துவத்தையும் வெளிக்காட்டி நிற்கும் ஒரு முக்கிய குறியீடாகும். தேசிய கீதமானது நாட்டிற்குரிய ஒரு கௌரவமாகும்.

**தேசிய கீதம் பாடக்கூடிய சந்தர்ப்பங்கள்**

☞ சுதந்திர தினம்
☞ தேசிய வைபவங்கள்
☞ அரச வைபவங்கள்
☞ பாடசாலையில் நடைபெறும் வைபவங்கள்
☞ எமது நாட்டை பிரதிநிதித்துவம்படுத்தும் போட்டி நிகழ்ச்சிகள்
☞ கருத்தரங்குகள், மகாநாடுகள் போன்ற சந்தர்ப்பங்களில் பாடப்படுதல் வேண்டும்.

**தேசிய கீதத்தை பாடும் பொழுது ஒழுக வேண்டிய முறை**

- ☞ கைகள் இரண்டையும் கீழே தொங்க விட்டு பெருவிரல்களை பூமியை நோக்கி நீட்டி ஏனைய விரல்களை இலகுவாக மடித்துக் கொள்ள வேண்டும்.
- ☞ குதிக்கால்களை நெருக்கமாகவும் பாதத்தின் முன்பகுதியை சற்று அகலப்படுத்தியும் **'V'** எழுத்து வடிவில் வைத்துக்கொள்ள வேண்டும்.
- ☞ உடலை நிமிர்த்தி நேராக வைத்துக் கொள்ள வேண்டும்.
- ☞ சரியான கொள்நிலை நின்று தேசிய கீதத்தைப் பாடுதல் வேண்டும்.

## தேசியக் கொடி

தேசிய கீதத்தை போன்று தேசியக் கொடியும் நாட்டின் அடையாளத்தை வெளிப்படுத்த கூடிய ஒன்றாகும். தேசியக் கொடியானது ஒரு நாட்டின் இறைமை, தேசிய தனித்துவம், தேசிய ஒற்றுமை ஆகியவற்றை வெளிக்காட்டி நிற்பதாகும்.

இன்று நடைமுறையில் காணப்படும் எமது நாட்டின் தேசியக் கொடியானது இலங்கையை கடைசியாக ஆட்சிபுரிந்த கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரம-ராஜசிங்கனின் கொடியை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்படுகிறது. இன்று நடைமுறையில் உள்ள தேசியக் கொடியானது 1948 ம் ஆண்டு இருந்த கொடியின் வடிவத்திலிருந்து சில மாற்றங்களுக்கு உட்பட்டு வந்துள்ளது.



1948ல் சுதந்திரதின விழாவிழன் போது ஏற்றப்பட்ட தேசிய கொடியானது, பின்னர் தேசிய கொடி அமைப்புக்குழுவின் சிபார்சின்படி 1951ல் சிறுசிறு மாற்றத்திற்குட்பட்டது. செம்மஞ்சள், பச்சை நிற கோடுகள் தேசிய கொடியில் சேர்க்கப்பட்டமையே அம் மாற்றங்கள் ஆகும். பின்னர் 1972ல் முதலாவது குடியரசு யாப்பு மாற்றத்தோடு மேலும் மாற்றம் செய்யப்பட்டது. அம் மாற்றம் என்னவென்றால் கொடியைச் சுற்றி மஞ்சள் நிறமும் சிங்கத்தைச் சுற்றி நான்கு மூலைகளிலும் அரச இலைகளும் சேர்க்கப்பட்டமையாகும்

தேசியக் கொடியில் காணப்படும் அடையாளங்கள், நிறங்கள் வெளிப்படுத்தும் அல்லது உணர்த்தும் விடயங்கள்

| அடையாளங்களும் நிறங்களும் | வெளிப்படுத்தும் விடயங்கள் |
|---|---|
| சிவப்பு நிற பின்னணியில் மஞ்சள் நிறத்தில் வாளேந்திய சிங்கம் | சிங்கள மக்கள் |
| வாள் | வீரம் அநீதிக்கெதிரான போராட்டம் |
| அரச இலைகள்<br>மெத்தா<br>கருணா<br>முதிதா<br>உபேக்ஷா | தர்ம உபதேசம்<br>அன்பு<br>காருண்யம்<br>மற்றவர் மகிழ்ச்சியில் தானும் மகிழல்<br>நன்மை தீமை இரண்டினையும் சமமாக கருதுதல். |
| செம்மஞ்சள் நிறக்கீலம் | தமிழ் மக்கள் |
| பச்சை நிறக் கீலம் | முஸ்லிம் மக்கள் |

## தேசியக் கொடிக்கு கௌரவமளிப்போம்

பிள்ளைகளே! தேசியக் கொடிக்கு உயர்ந்த கௌரவத்தை நாம் அளித்தல் வேண்டும். தேசியக் கொடிக்கு அகௌரவம் ஏற்படும் வகையில் நாம் செயற்படக் கூடாது. குறிப்பாக தேசியக் கொடியினை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடாது. பழுதடைந்த தேசியக் கொடியாக இருந்தாலும் அதற்கு உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும். மேசை விரிப்பாகவோ கைக்குட்டையாகவோ. படுக்கை விரிப்பாகவோ அல்லது இதுபோன்ற தேவைகளுக்கோ பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு பயன்படுத்தும் நபர்களைக் கண்டால் தேசியக் கொடியின் கௌரவத்தை உரிய நபர்களுக்கு விளங்கப்படுத்தி அவர்களை அச் செயலில் ஈடுபடாமல் தடுத்து தேசியக் கொடியைப் பாதுகாக்க வேண்டும்.

**தேசியக் கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள்**

- சுதந்திர தினம்
- தேசிய வைபவங்கள்
- அரச வைபவங்கள்
- பாடசாலையில் நடைபெறும் வைபவங்கள்
- அரச திணைக்களங்கள், நிறுவனங்களில் நடைபெறும் வைபவங்கள்

**தேசியக் கொடியை ஏற்றும் போது பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்கு முறை**

- தேசியக் கொடியை எச்சந்தர்ப்பத்திலும் கீழே வைக்கப்படக் கூடாது.
- தேசியக் கொடியே முதலில் ஏற்றப்பட வேண்டும்.
- எந்தவொரு சந்தர்ப்பதிலும் தேசியக் கொடி ஏற்றப்பட்டிருக்கும் உயரத்திற்கு மேல் வேறு எந்த கொடியும் ஏற்றலாகாது. எனினும், மதக் கொடிகளோடு தேசியக் கொடி ஏற்றப்படும் பொழுது அவை ஒரே உயர மட்டத்தில் காணப்படுதல் வேண்டும்.
- தேசியக் கொடியானது தெளிவாக தெரியக் கூடிய இடத்தில் ஏற்றப்பட வேண்டும்
- தேசியக் கொடி இரவு நேரங்களில் ஏற்றி வைக்கப்படுமாயின் அதற்கு வெளிச்சம் கொடுக்கப்படல் வேண்டும்.
- வெளிநாட்டு தூதுவர்கள் தலைவர்களை வரவேற்கும் சந்தர்ப்பங்களில் இரு நாட்டின் கொடிகளும் ஏற்றப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் இரு நாட்டு கொடிகளும் ஒரே உயரத்தில் ஏற்றப்படல் வேண்டும்.
- மேடைகளில் தேசியக் கொடியானது பேச்சாளர்களின் வலது புறம் ஏற்றப்பட்டிருத்தல் வேண்டும்.



- ஊர்வலங்களின் போது தேசிய கொடியானது நேராக எடுத்துச் செல்லப்படல் வேண்டும் எந்தக்காரணம் கொண்டும் தேசிய கொடியை கீழே பணிக்கக் கூடாது.
- தேசிய துக்கதினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடல் வேண்டும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

கம்பத்தின் மூன்றில் ஒரு பகுதிவரை மாத்திரம்கீழ் இறக்கிப்பறக்க விடப்படல் வேண்டும். கொடியை இறக்கும் போது உச்சி வரை கொண்டு சென்று பின் இறக்குதல் வேண்டும்.

**தேசியக் கொடியை ஏற்றும் பொழுது நடந்து கொள்ள வேண்டிய முறைகள்**

☞ அனைவரும் எழுந்திருத்தல் வேண்டும்.


☞ உடலை நேராக நிமிர்த்தி வைத்திருத்தல் வேண்டும்.

☞ அனைவரும் தேசியக் கொடியைப் பார்த்தவாறு நிற்றல் வேண்டும்

☞ வேறு வேலைகளில் ஈடுபடாமல் அமைதியாக நிற்றல் வேண்டும்

☞ தேசியக் கொடி ஏற்றியதும் தேசிய கீதம் பாடப்படுதல் வேண்டும்.

**தேசிய இலட்சினை :**



தேசிய தனித்துவத்தை வெளிகாட்டும் மற்றொரு அடையாளம் தேசிய இலட்சினை ஆகும். தற்போது நடைமுறையில் உள்ள தேசிய இலட்சினையானது 1972 ம் ஆண்டு இலங்கை குடியரசு யாப்பு உருவாக்கப்பட்ட அதே ஆண்டில் உருவாக்கப்பட்டதாகும்.

தேசிய இலட்சினையில் காணப்படும் அடையாளங்கள் வெளிப்படுத்தும் விடயங்கள்

| அடையாளம் | வெளிப்படுத்தும் விடயங்கள் |
|---|---|
| தர்ம சக்கரம் | தர்மமும் சமத்துவமும் |
| மலர் இதழ் | தூய்மை |
| சிங்கம் | வீரம் |
| நெற்கதிர் | தன்னிறைவு |
| நிறை கலசம் | சௌபாக்கியம் |
| சூரியன், சந்திரன் | உலக நிலைப்பாடு |

## தேசிய மலர்

இலங்கையின் தேசிய மலர் நீல அல்லி (நீலோற்பல) ஆகும் இம்மலரானது தூய்மை, உண்மை, ஒழுக்கம் என்பவற்றின் குறியீடாக கொள்ளப்படுகின்றது.



இம் மலரானது இலங்கையின் வரலாற்றுடனும் கலாசாரத்துடனும் பின்னிப் பிணைந்துள்ளது. சிங்கள, பாளி, சமஸ்கிருத இலக்கியங்களில் இம் மலர் பற்றி கூறப்பட்டுள்ளது. இம்மலரானது இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் காணப்படும். கூடுதலாக கிராமப்புறங்களில் நீர் நிலைகளில் அவதானிக்கலாம். இம் மலரானது வருடம் முழுவதும் பூக்கக்கூடியது. பூ மலரும் பொழுது ஆரம்பத்தில் வெள்ளை நிறமாக இருந்து முற்றிய பின் நீல நிறமாக மாறும். இம் மலரினை மூலிகை மருந்தாகவும் இம்மரத்தின் கிழங்கினை உணவிற்கும் பயன்படுத்தலாம். இம்மலரானது அழகாகவும் கவர்ச்சியாகவும் காணப்படும். இவ்வாறான காரணங்களினால் இம் மலரானது 1986 ஆம் ஆண்டு தேசிய மலராக பிரகடனப்படுத்தப்பட்டது.

தேசிய மலரை வெவ்வேறு மொழிகளால் வெவ்வேறு பெயர் கொண்டு அழைப்பர் அவை பின்வருமாறு :-

| | |
|---|---|
| சிங்களத்தில் வழங்கும் பெயர் | மானெல்நிலுபுல் |
| தமிழில் வழங்கும் பெயர் | நீல அல்லி நீலோப்பவம் |
| ஆங்கிலத்தில் வழங்கும் பெயர் | வோட்டர் லில்லி(Water Lilly) |
| தாவரவியற் பெயர் | நிம்பெயா ஸ்ரெலாற்றா (Nymphae Stellata) |

## தேசிய மரம்

இலங்கையின் தேசிய மரம் நாக மரம் ஆகும். சமூகரீதியாகவும் கலாசார ரீதியாகவும் நாம் நாக மரத்துடன் பல நூற்றாண்டுகள் நெருக்கமாக இருந்து வருகிறோம். இம் மரம் 1986 ல் தேசிய மரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

**இம் மரத்தை தேசியமரமாக பிரகடனப்படுத்துவதற்குரிய காரணங்கள் பின்வருமாறு**

(1) இதன் ஆரம்பம் இலங்கையாகும் .

(2) மரத்தின் பயன்பாடு

(3) நிறமும் இயல்பும்

(4) வரலாற்று ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றிருத்தல்

(5) பரம்பல்

(6) வரைவதற்கு இலகுவாக இருப்பது

தேசிய மரத்தினை வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பெயர் கொண்டு அழைப்பர். அவை பின்வருமாறு. :-

| | | |
|---|---|---|
| சிங்களத்தில் வழங்கும் பெயர் | - | நா |
| தமிழில் வழங்கும் பெயர் | - | நாக மரம் |
| ஆங்கிலத்தில் வழங்கும் பெயர் | - | அயன் வூட்ரீ |
| தாவரவியற் பெயர் | - | மொசு ஆபெர்ரெயா |



இம்மரத்தின் இலைகள் ஆரம்பத்தில் குருத்தாக இருக்கும் போது அழகானதும் பிரகாசமானதுமான சிவப்பு இலைகளாக காணப்படும். முற்றிய பின்னர் கடும் பச்சை நிறமாக காணப்படும். இம்மரத்தின் பலகைகள் நீண்ட காலம் பாவனைக்கு பயன்படுத்தக் கூடியதாக வைரமுடையதாக காணப்படுகிறது. புராதன காலத்தில் இம்மரத்தின் பலகைகளைக் கொண்டு பாலங்கள் அமைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது மர வேலைகளுக்கு இது பயன்படுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. காரணம் இதன் சமய ரீதியான பெறுமதியினாலாகும். இம்மரத்தின் பூ மூலிகை மருந்தாகவும் வாசனைக்கும் பயன்பட்டு வருகிறது.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**செயற்பாடு**

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. தேசிய தனித்துவத்தை காட்டும் குறியீடுகள் யாவை ?
2. தேசிய கீதத்தின் கருத்தை உமது சொந்த வசன நடையில் எழுதுக?
3. தேசிய மலரையும் தேசிய மரத்தையும் பாதுகாப்போம் என்ற தலைப்பில் 100சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை வரைக
4. தேசியக் கொடியை சரியாக ஏற்றி தேசிய கீதத்தை பாடுங்கள்.
5. தேசிய மலரையும் தேசிய மரத்தையும் உங்கள் அப்பியாச புத்தகத்தில் வரைந்து நிறந்தீட்டவும்.

## 8.6 ஒருசிறந்த குடிமகனின் பண்புகள்

இன்று சிறுவர்களாக இருக்கும் நீங்கள் எதிர் காலத்தில் வளர்ந்து எமது நாட்டின் சிறந்த குடிமக்களாக வரவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். ஒவ்வொரு குடிமகனும் தான் நினைத்தவாறு எப்படியும் வாழலாம் என வாழ முடியாது. சமூகத்தில் பல்வகைமை உணடு என்பதனை நீங்கள் முன்னர் கற்றுள்ளீர்கள். எனவே, ஒருவரும் தனித்து மற்றவர்களின் துணையின்றியும் தொடர்புகள் இன்றியும் வாழ முடியாது.

தனி மனிதன் தான் வாழுகின்ற சூழலில் உள்ள மக்களுடனும் விலங்குகள், தாவரங்கள் போன்ற அனைத்து சூழல் காரணிகளுடனும் இணைந்து வாழவேண்டியது அவசியமாகும். இவ்வாறு இணைந்து வாழ முற்படும் பொழுது ஏனையவர்களை பாதிக்காத வகையில் நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு வாழ்வதற்கு ஒவ்வொரு குடிமகனும் சிறந்த பண்புகளை தன்னுள் வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். அவ்வாறான பண்புகள் சில பின்வருமாறு.

☞ அன்புடனும் கருணையுடனும் செயற்படல் வேண்டும்.

எமது அன்றாட வாழ்க்கையில் அன்புடனும் கருணையுடனும் நடந்து கொள்ளவேண்டிய பல சந்தர்ப்பங்களை நாம் எதிர் கொள்கின்றோம். ஒருவர் மேல் பிரதிபலன் பாராது நீங்கள் கொண்டுள்ள அக்கறைதான் அன்பாகும். இவ்வாறு அடுத்தவர் மேல் அன்பும் கருணையும் காட்டுவதன் மூலம் நீங்கள் அனைவராலும் விரும்பப்படும் ஒருவராவீர்கள். அனைவராலும் விரும்பப்படும் ஒருவரால் தான் நாட்டிற்கு சிறந்தசேவையாற்ற முடியும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

☞ கடமைகள் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.

நாட்டின் பிரஜை என்ற வகையில் எம் ஒவ்வொவருக்கும் கடமைகளும் பொறுப்பக்களும் உண்டு. எனினும் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பொறுப்புக்களைத் தெரிந்து வைத்திருத்தல் மட்டும் போதாது. அவற்றினை உரிய வேளையில் நிறைவேற்ற வேண்டும். சமூகம் தொடர்பாக சட்டரீதியாக செயற்படுத்த வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும் உண்டு. அதே போல் பண்பாட்டு ரீதியாக நிறைவேற்ற வேண்டியவையும் உண்டு. கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் சிறந்த குடிமகன் என்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

☞ சட்டத்தை மதித்து நடத்தல் வேண்டும்.

நாட்டின் பிரஜை ஒவ்வொருவரினதும் குடியுரிமை, அரசியல் உரிமை, அடிப்படை உரிமை போன்றவற்றை பாதுகாப்பதற்கு சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாடும் தத்தமது சூழ் நிலைகள், தேவைகள், கலாசாரம் போன்றவற்றை அடிப்படையாக கொண்டு சட்டங்களை உருவாக்குகின்றன. இவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நாம் நடக்க வேண்டும். சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கின்ற போது நாட்டிலே அமைதியும் விருத்தியும் ஏற்படும்.

☞ ஜனநாயக வாதியாக இருத்தல் வேண்டும்

சமூகத்தின் சீரான இயங்குநிலைக்கு ஜனநாயகம் இன்றியமையாததாகும். சமூகத்தில் பல்வேறு அபிப்பிராயங்களை உடைய பலர் காணப்படுவர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பலரின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். பெரும்பாலாரின் அபிப்பிராயத்திற்கு ஏற்ப தீர்மானங்களை மேற்கொள்பவராக இருத்தல்வேண்டும். தனியொருவராக இருந்து சர்வதிகார முறையில் தீர்மானங்கள், முடிவுகள் எடுத்தல் கூடாது. பலரின் ஒத்துழைப்புடன் எடுக்கப்படும் தீர்மானங்கள் இலகுவில் செயல்படுத்தக் கூடியதாக இருக்கும்.

☞ சூழலினை பாதுகாப்பவராக இருத்தல் வேண்டும்

சமூகம் நிலைத்திருப்பதற்கு சூழல் பாதுகாப்பாக அமைந்திருத்தல் அவசியமாகும். சூழலில் இயற்கையான அம்சங்களும் செயற்கையான அம்சங்களும் காணப்படுகின்றன. இவற்றுக்கு பாதிப்பினை ஏற்படுத்தினால் மனிதன் ஆரோக்கியமாக வாழ முடியாது. எனவே நீங்கள் நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் உங்கள் சூழலினைப் பாதுகாத்து வைத்திருத்தல் வேண்டும்.

### ☞ பொதுச் சொத்துக்களை நல்ல முறையில் பேண வேண்டும்

பொது மக்களின் நலன் கருதி அரசாங்கமும் பொது நிறுவனங்களும் பொதுச் சொத்துக்களை உருவாக்குகின்றன. உதாரணமாக, பாடசாலைக் கட்டிடங்கள், வைத்தியசாலைகள், நூல் நிலையங்கள், தெரு விளக்குகள், பேரூந்துகள், புகையிரதங்கள் போன்றன ஆகும். இவற்றில் இருந்து பொதுமக்கள் தடையின்றி பயனைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறான பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தாமல் ஒவ்வொருவரும் தமது சொத்துக்களைப் போல் பாவிக்க வேண்டும். அவ்வாறான நல்ல முறையில் பயன்படுத்துகின்ற போது அவை நீண்ட காலம் அம்மக்களுக்கு பயன்படுவதோடு அடுத்து வரும் சந்ததியினருக்கும் பயன்படும். எனவே, பொதுச் சொத்துக்களை நல்ல முறையில் பேணிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

### ☞ மரபுகள், சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும்

பன்மைக் கலாசாரத்தை கொண்ட இலங்கையில் ஒவ்வொரு சமூகங்களுக்குமான மரபுகள், சம்பிரதாயங்கள், சட்டத்திட்டங்கள் காணப்படுகின்றன. அவ்வாறான வற்றை மதித்து நடப்பதன் மூலம் சமூகங்களிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்படும். இல்லாவிட்டால் பிணக்குகள் தோன்றுவதற்கே வழியேற்படும். எனவே சிறந்த குடிமகன் தான் வாழும் நாட்டில் நிலவுகின்ற மரபுகள் சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

**செயற்பாடு**

1. **மாணவர்கள் குழுக்களாக இயங்கி ஒவ்வொரு குழுவும் நற்பிரஜை என்பதன் வரைவிலக்கணத்தை அமைக்க.**
2. **நீங்கள் அன்புடனும் கருணையுடனும் நடந்த சந்தர்ப்பங்களை நினைவுபடுத்தி சக மாணவர்களுடன் கலந்துரையாடுக.**
3. **மாணவர்கள் குழுக்களாக இயங்கி “சூழலை பாதுகாப்போம்” என்ற தலைப்பிற்கு ஏற்ப சிறிய வசனங்களை (கூற்றுக்கள்) உருவாக்கி பாடசாலையில் காட்சிப்படுத்தவும்.**

### சாரம்சம்

கலாசாரம் என்பது மக்கட் குழுவினால் தோற்றுவிக்கப்பட்ட பழக்கவழக்கங்கள், ஆற்றல்கள், நம்பிக்கைகள், கலைகள்போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டான செயற்பாடாகும். இலங்கையானது பன்மைக் கலாசாரத்தை கொண்ட ஒரு நாடாகும்.

அதில் சிங்கள - பௌத்த கலாசாரம், இந்து - தமிழ் கலாசாரம், இஸ்லாமிய கலாசாரம் ஆகியன முக்கியமாகப் பேணப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டின் மக்கள் அனைவரும் ஒரே நாட்டவர் என்ற உணர்வுடன் கருமமாற்றுவதன் மூலம் தேசிய உணர்வு வலுப் பெறும். எமது நாட்டின் தேசிய தனித்துவத்தையும் அடையாளத்தையும் தேசியக் கொடி, தேசிய கீதம், அரச இலட்சனை, தேசிய மலர், தேசிய மரம் போன்றன வெளிக்காட்டுகின்றன. ஒரு சிறந்த குடிமகன் அன்புடன் செயற்படுபவராகவும், கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுபவராவும், சட்டத்தை மதிப்பவராகவும், ஜனநாயக வாதியாகவும், சூழலினை பாதுகாப்பவராகவும், பொதுச் சொத்துக்களைப் பேணுபவராகவும் போன்ற பல பண்புகளை உடையவராக இருத்தல் வேண்டும்.